**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.224/2022**

பெயர்-திரு. பெருமாள் நாள்.11.11.2025

பி.வா.சா.1 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.1 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால், தாவா சொத்து அவருக்கு பாத்தியமானது என வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனக்கு தாவா சொத்து கிரையத்தின் படி பாத்தியப்பட்டது. வெள்ளையப்பனிடம் இருந்து, மல்லையகவுண்டர் கிரையம் பெற்றார். எந்த வருடம் கிரையம் வாங்கினார் என எனக்கு தெரியாது. மல்லையகவுண்டரிடம் இருந்து எனது தாயார் அண்ணாமலையச்சி தாவா சொத்தை வாங்கினார். எனது தாயார் எந்த வருடம் கிரையம் பெற்றார் என்றால், 50 ஆண்டுகள் இருக்கும். தாவா சொத்திற்கான காலை எண் தெரியாது. சத்தியமங்கலம் சார்பு நீதிமன்ற வழக்கு எண்.87/2022 வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். மேற்படி வழக்கில் சர்வே எண் தவறானது எனவும், சரியான சர்வே எண் குறிப்பிட்டு விளம்புகை பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். சரியான சர்வே எண் எனக்கு தெரியாது.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வழக்கானது குறுக்குவிசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA

Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.11.11 14:44:05 +0530

District Munsif